**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஊத்தங்கரை .**
**முன்னிலை – திரு. து. சரவணன் பி.ஏ., பி.எல்.,**
குற்றவியல் நடுவர்,ஊத்தங்கரை
2026 – ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.14/2023**

**CNR NO:TNKI12-000775-2023**

அரசுக்காக:-
காவல் உதவி ஆய்வாளர்,
ஊத்தங்கரை காவல் நிலையம்,
குற்ற எண். 406/2022 .... குற்றமுறையிடுபவர்.

/எதிர்/

1.குமார் த/பெ.சின்னதம்பி
2.அம்மாசி த/பெ. சின்னதம்பி .... குற்றஞ்சாட்டப்பட்டவர்கள்

இவ்வழக்கு 15.02.2023 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை – 1 திருமதி.R.டீனா அவர்களும் எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.சரவணன் அவர்கள் முன்னிலையாகி நடத்திட இரு தரப்பு வாதுரைக் கேட்கப்பட்டு, சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டு, நன்கு ஆராய்ந்த பின்னர் இன்று, இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கிடும்.

**தீர்ப்புரை**

கடந்த 08.09.2022ம் தேதி இரவு 10.00மணிக்கு புதுக்காடு கிராமத்தில் உள்ள 1ம் எதிரி குமார் வீட்டிடம் TN-29-AR-9376 PIK UP வண்டியில சென்ற சாட்சி சுரேஷ்குமார் எதிரி குமார் என்பவரை பார்த்து தனக்கு கொடுக்கவேண்டிய பணத்தை கொடுடா என்று கேட்டதற்கு எதிரிகள் குமார் மற்றும் அம்மாசி ஆகிய இருவரும் சாட்சி சுரேஷ்குமாரை பார்த்து

டே தேவிடியா கண்டாரஓலி பையா உனக்கு என்னடா பணம் கொடுக்கனும் என்றும் திட்டியும், 1ம் எதிரி குமார் சாட்சி சுரேஷ்குமார் மற்றும் ஆறுமுகம் ஆகிய இருவரின் நடு தலையின் மீது ரீப்பர் கட்டையால் அடித்து இருவருக்கும் சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், 2ம் எதிரி அம்மாசி என்பவர் சுரேஷ்குமாரின் இடது தோள்பட்டையின் மீது கையால் அடித்தும், சாட்சி செல்வியின் இடது பக்க தலையின் மீது கட்டையால் அடித்து சொற்பகாயமும், சாட்சி பழனியம்மாள் என்பவரின் முதுகு மீது கையால் அடித்து சொற்பகாயம் ஏற்படுத்தியும், 2ம் எதிரி அம்மாசி சாட்சி சுரேஷ்குமாருக்கு சொந்தமான TN–29–AR–9376 PIK UP வாகனத்தின் முன் பக்க கண்ணாடியை கட்டையால் அடித்து உடைத்து ரூ.3000/– சேதம் ஏற்படுத்தியதாகவும் ஊத்தங்கரை காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b),323,324,427–ன் கீழும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கில் எதிரிகள் முன்னிலையானதும், எதிரிகளுக்கு அரசு தரப்பு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. 207 பிரிவின் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

3. எதிரிகளுக்கு நகல்கள் வழங்கிய பின்பு, எதிரிகளிடம் குற்றம் பற்றி வினவிய போது, எதிரிகள் குற்றத்தை மறுத்து குற்றவாளி இல்லை என்றார்கள். இருதரப்பும் கேட்டும் வழக்காவணங்களைப் பரிசீலனை செய்தும், எதிரிகள் மீது குற்றச்சாட்டுகள் வனைய முதல் நோக்கில் போதுமான ஆரம்ப ஆதாரங்கள் இருந்ததால், 1 ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(b),324–ன் கீழும், 2ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(b),323,427–ன் கீழும் குற்றச்சாட்டுகள் வனைந்து படித்துக் காட்டி விளக்கி கூறி கேள்வி கேட்டபோது, எதிரிகள் மீண்டும் குற்றங்களை மறுத்து குற்றவாளி

இல்லை என்றார்கள்.

4. இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.14 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம்:–</u>

5. கடந்த 08.09.2022ம் தேதி இரவு 10.00மணிக்கு புதுக்காடு கிராமத்தில் உள்ள 1ம் எதிரி குமார் வீட்டிடம் TN–29–AR–9376 PIK UP வண்டியில சென்ற சாட்சி சுரேஷ்குமார் எதிரி குமார் என்பவரை பார்த்து தனக்கு கொடுக்கவேண்டிய பணத்தை கொடுடா என்று கேட்டதற்கு எதிரிகள் குமார் மற்றும் அம்மாசி ஆகிய இருவரும் சாட்சி சுரேஷ்குமாரை பார்த்து டே தேவிடியா கண்டாரஓலி பையா உனக்கு என்னடா பணம் கொடுக்கனும் என்றும் திட்டியும், 1ம் எதிரி குமார் சாட்சி சுரேஷ்குமார் மற்றும் ஆறுமுகம் ஆகிய இருவரின் நடு தலையின் மீது ரீப்பர் கட்டையால் அடித்து இருவருக்கும் சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், 2ம் எதிரி அம்மாசி என்பவர் சுரேஷ்குமாரின் இடது தோள்பட்டையின் மீது கையால் அடித்தும், சாட்சி செல்வியின் இடது பக்க தலையின் மீது கட்டையால் அடித்து சொற்பகாயமும், சாட்சி பழனியம்மாள் என்பவரின் முதுகு மீது கையால் அடித்து சொற்பகாயம் ஏற்படுத்தியும், 2ம் எதிரி அம்மாசி சாட்சி சுரேஷ்குமாருக்கு சொந்தமான TN–29–AR–9376 PIK UP வாகனத்தின் முன் பக்க கண்ணாடியை கட்டையால் அடித்து உடைத்து ரூ.3000/– சேதம் ஏற்படுத்தியதாகவும் பட்டியல் சாட்சி–10 குட்டியப்பன் காவல் உதவி ஆய்வாளர் கடந்த 09.09.2022ஆம் தேதி ஊத்தங்கரை காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளராக திரு.ஜெயகாந்தன் என்பவர் இருந்தபோது ஊத்தங்கரை அரசு மருத்துவமனையில் இருந்து

கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று ஊத்தங்கரை அரசு மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த சுரேஷ்குமார் என்பவர் வந்து வாக்குமூலம் பதிவு செய்தும் பின்னர் நிலையம் வந்து குற்ற எண் 406/2022 சட்டப்பிரிவுகள் 294பி , 323, 324, 427 இதச ஆகு வழக்கு பதிவு செய்தும் பின்னர் வழக்கின் சம்பவ இடத்திற்கு 9/9/2022 தேதி 8:30 மணிக்கு சாட்சிகள் கந்தசாமி, அரிப்புத்திறன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடம் சென்று பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தும் பின்னர் சுரேஷ்குமார், ஆறுமுகம் செல்வி, பழனியம்மாள், சீனிவாசன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும் வழக்கில் எதிரிகள் பயன்படுத்திய ரீப்பர் கட்டையை அரிபுத்திரன் மற்றும் கந்தசாமி ஆகியோர் முன்னிலையில் கையகபடுத்தி கைப்பற்றுதல் மகஜர் மற்றும் படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும் பின்னர் இவ்வழக்கின் எதிரிகள் ஊத்தங்கரை குற்றவியல் நீதித்துறை நடுவர் முன்னிலையில் சரணடைந்து பிணையில் சென்றும், பின்னர் வழக்கினை விசாரித்து புலன் விசாரணை அதிகாரி காவல் உதவி ஆய்வாளர் குட்டியப்பன் எதிரிகள் மீது 294பி, 323, 324, 427 இதச பிரிவுகளில் இறுதி அறிக்கை தாக்கல் செய்தததகாகவும் அரசு தரப்பில் உள்ளது.

<u>அரசுத்தரப்பு சாட்சிகள்:-</u>

6. அரசுத்தரப்பில் நடந்த சம்பவம் பற்றியும், புகார் வாக்குமூலம் கொடுத்தது பற்றியும் அ.சா.1 சுரேஷ்குமார் என்பவர் விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் அ.சா.ஆ.1 ஆகவும், சமாதான மனு அ.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. அ.சா.2 ஆறுமுகம் சம்பவம் பற்றியும், சம்பவத்தின்போது தனக்கு ஏற்பட்ட காயம்

பற்றியும் கூறும் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.3 செல்வி சம்பவம் பற்றியும், சம்பவத்தின்போது தனக்கு ஏற்பட்ட காயம் பற்றியும் கூறும் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். இவ்வழக்கில் பட்டியல் சாட்சி–11 காவல் உதவி ஆய்வாளர் மோகன் அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலம் புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.3 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகவும், பார்வைமகஜர் அ.சா.ஆ.5 ஆகவும், மாதிரிவரைபடம் அ.சா.ஆ.6 ஆகவும், அ.சா.1 க்கு பெறப்பட்ட விபத்துபதிவேடு அ.சா.ஆ.7 ஆகவும், அ.சா.2 க்கு பெறப்பட்ட விபத்துபதிவேடு அ.சா.ஆ.8 ஆகவும், அ.சா.3 க்கு பெறப்பட்ட விபத்துபதிவேடு அ.சா.ஆ.9 ஆகவும், அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானோருக்கு பெறப்பட்ட காயச்சான்றிதழ் அ.சா.ஆ.10 முதல் அ.சா.ஆ.12 ஆகவும், கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.13 ஆகவும், படிவம் 91 அ.சா.ஆ.14 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**<u>எதிரியை கு.வி.மு.ச. 313 (1) (ஆ) பிரிவின் கீழ் வினவுதல்:–</u>**

7. இவ்வழக்கில் அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிகளுக்கு எதிராக அமைந்துள்ள சாட்சியங்கள் குறித்து கு.வி.மு.ச. 313 (1) (ஆ) பிரிவின் கீழ் வினவிய போது, அவற்றை எதிரி மறுத்துள்ளார். எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறப்பட்டுள்ளது. இருதரப்பும் கேட்கப்பட்டது.

**<u>ஆய்வுக்குரிய பிரச்சினை:–</u>**

8. இவ்வழக்கில் அரசு தரப்பில் 1 ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(b),324–ன் கீழும், 2ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(b),323,427–ன் கீழான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**<u>வாதுரைகள்:–</u>**

9. அரசுத்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில், அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அலுவலக சாட்சி எவ்வித முரண்பாடுகளும் இன்றி தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார் என்றும், எனவே எதிரிகளை தண்டிக்க வேண்டுமென்று வாதிட்டார்.

10. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் வாதிடும் போது அரசுத்தரப்பு வழக்கு பொய் வழக்கு என்றும், வேண்டுமென்றே ஜோடிக்கப்பட்ட வழக்கு என்றும், அரசுத்தரப்பில் சம்பவ சாட்சி மற்றும் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சி வழக்கு சம்பவம் பற்றி சாட்சியம் அளிக்காமல் பிறழ் சாட்சியாகியுள்ளனர் என்றும், எனவே அரசுத் தரப்பில் எதிரிகளின் மீதான குற்றச்செயல்கள் நிரூபிக்கப்படாததால் எதிரியை விடுதலை செய்ய வேண்டுமென்று வாதிட்டார்.

**<u>சாட்சியங்களின் மதிப்பீட்டல்:–</u>**

11. இவ்வழக்கின் ஆவணங்களை பரிசீலணை செய்தபோது வழக்கின் சம்பவம் பற்றி கூறக்கூடிய சாட்சி அ.சா.1 சுரேஷ்குமார் இந்த வழக்கை தீர்மானிக்கும் முக்கிய சாட்சியாக இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, அ.சா.1 சுரேஷ்குமாரின் சாட்சியத்தினை கண்ணுற்றபோது, அ.சா.1 தனது முதல் விசாரணைச் சாட்சியத்தில் ஆஜர் எதிரிகளைத் தெரியும் என்றும் எதிரிகளும் தாங்களும் தற்போது சமாதானமாகி விட்டோம் என்றும் அவர்கள் மீது நடவடிக்கை எதுவும் வேண்டாம் என்றும் தன்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்றும் அ.சா.ஆ.2 சமாதானமனு ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் அதில் உள்ள சங்கதிகள் தனக்கு தெரியாது என்றும் போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் போலிசார்

விசாரணையிலும் மேற்கண்டவாறுதான் கூறினேன் என்றும் பிறழ்சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 யை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்தபோது அரசு தரப்பில் கேட்கப்பட்ட கேள்விகளை மறுத்து சரியல்ல என்று சாட்சியம் அளித்துள்ளதால் அ.சா.1 சுரேஷ்குமாரின் சாட்சியம் அரசுதரப்பு வழக்கிற்கு ஆதரவாக இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

12. இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 ஆறுமுகம் தனது முதல் விசாரணை சாட்சியத்தில் தான் புதுக்காடு கிராமத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும், தனது ஊரைச்சேர்ந்தவர்கள் அ.சா.1 சுரேஷ்குமார் எனது மாமா ஆவார் என்றும் எதிரிகளும் தாங்களும் தற்போது சமாதானமாகி விட்டோம் என்றும் அவர்கள் மீது நடவடிக்கை எதுவும் வேண்டாம் என்றும் போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் பிறழ்சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 யை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்தபோது அரசு தரப்பில் கேட்கப்பட்ட கேள்விகளை மறுத்து சரியல்ல என்று சாட்சியம் அளித்துள்ளதால் அ.சா.2 ஆறுமுகத்தின் குறுக்குவிசாரணை சாட்சியமும் அரசுதரப்பு வழக்கிற்கு ஆதரவாக இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

13. இவ்வழக்கின் மற்றொரு கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 செல்வி தனது முதல் விசாரணை சாட்சியத்தில் நான் புதுக்காடு கிராமத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன் என்றும் ஆஜர் எதிரிகளைத் தெரியும், தனது ஊரைச்சேர்ந்தவர்கள் அ.சா.1 சுரேஷ்குமார் எனது தம்பி முறை என்றும் அ.சா. 2 தனது கணவர் ஆவார் என்றும் எதிரிகளும் தாங்களும் தற்போது சமாதானமாகி விட்டோம் என்றும்

அவர்கள் மீது நடவடிக்கை எதுவும் வேண்டாம் என்றும் போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் பிறழ்சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.3 யை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்தபோது அரசு தரப்பில் கேட்கப்பட்ட கேள்விகளை மறுத்து சரியல்ல என்று சாட்சியம் அளித்துள்ளதால் அ.சா.3 செல்வியின் குறுக்குவிசாரணை சாட்சியமும் அரசுதரப்பு வழக்கிற்கு ஆதரவாக இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

14. இவ்வழக்கில் ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கும் அ.சா.4 திரு.மோகன் தனது சாட்சியத்தில் கடந்த 09.09.2022ஆம் தேதி ஊத்தங்கரை காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளராக திரு.ஜெயகாந்தன் என்பவர் இருந்தபோது ஊத்தங்கரை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று ஊத்தங்கரை அரசு மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த சுரேஷ்குமார் என்பவர் வந்து அ.சா.ஆ.3 புகார் வாக்குமூலம் பதிவு செய்தும், பின்னர் நிலையம் வந்து குற்ற எண் 406/2022 சட்டப்பிரிவுகள் 294பி , 323, 324, 427 இதச ஆக அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை வழக்கு பதிவு செய்தும், பின்னர் வழக்கின் சம்பவ இடத்திற்கு 9/9/2022 தேதி 8:30 மணிக்கு சாட்சிகள் கந்தசாமி, அரிப்புத்திறன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடம் சென்று பார்வையிட்டு அ.சா.ஆ.5 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.6 மாதிரி வரைபடம் தயார் செய்தும் பின்னர் சுரேஷ்குமார், ஆறுமுகம் செல்வி, பழனியம்மாள், சீனிவாசன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், வழக்கில் காயமடைந்த சுரேஷ்குமார், ஆறுமுகம், செல்வி ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ரவீனா கோமதி

என்பவரை விசாரித்து சிகிச்சை பெற்ற சுரேஷ்குமார், ஆறுமுகம், செல்வி, ஆகியோர்களது விபத்து பதிவேடுகள் மற்றும் காயச் சான்றிதழ்கள் அ.சா.ஆ.7 முதல் அ.சா.ஆ.12 ஆகவும், வழக்கில் எதிரிகள் பயன்படுத்திய சா.பொ.1 ரீப்பர் கட்டையை அரிபுத்திரன் மற்றும் கந்தசாமி ஆகியோர் முன்னிலையில் கையகபடுத்தி அ.சா.ஆ.13கைப்பற்றுதல் மகஜர் மற்றும் அ.சா.ஆ.14 படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும் பின்னர் இவ்வழக்கின் எதிரிகள் ஊத்தங்கரை குற்றவியல் நீதித்துறை நடுவர் முன்னிலையில் சரணடைந்து பிணையில் சென்றுள்ளார்கள். பின்னர் வழக்கினை விசாரித்து புலன் விசாரணை அதிகாரி காவல் உதவி ஆய்வாளர் குட்டியப்பன் எதிரிகள் மீது 294பி, 323, 324, 427 இதச பிரிவுகளில் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

15. இவ்வழக்கில் சம்பவம் பற்றி புகார் வாக்குமூலம் கொடுத்த புகார்தாரர், கண்ணுற்ற சாட்சிகள் ஆகியோர் அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் பிறழ் சாட்சியாக மாறியுள்ளதால் மேற்கொண்டு வழக்கில் எவ்வித பயனும் ஏற்படாது என்று கருதி மற்ற அனைத்து பட்டியல் சாட்சிகளையும் நீக்கரவு செய்துவிட்டு இந்த வழக்கில் அ.சா.1 சுரேஷ்குமார் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று, இவ்வழக்கினை பதிவு செய்து, புலன் விசாரணை மேற்கொண்டு, குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த பட்டியல் சாட்சி-10 குட்டியப்பன் காவல் உதவி ஆய்வாளர் என்பவரின் கையெழுத்து நன்கு பரிச்சயம் ஆன அ.சா.4 காவல் உதவி ஆய்வாளர் மோகன் என்பவரை விசாரித்து வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் குறியீடு செய்து, அரசுத்தரப்பு சாட்சி விசாரணையை முடித்து அரசுத்தரப்பு குற்றத்துறை உதவி வழக்கறிஞர்

அவர்கள் மேற்குறிப்பு செய்துள்ளார்.

16. மேற்கண்டவாறு அரசுத்தரப்பு வழக்கில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 சாட்சியின் சாட்சியத்தை பரிசீலனை செய்யும்போது, எதிரிகள் அ.சா.1 சுரேஷ்குமாரை கெட்டவார்த்தையால் திட்டவோ, அடித்து காயப்படுத்தவோ, சேதம் ஏற்படுத்தவோ இல்லை என்பது தெள்ளத் தெளிவாக தெரிகின்றது. இச்சூழ்நிலையில் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை தயார் செய்து, வழக்கின் புலன்விசாரணை மேற்கொண்டது பற்றி அ.சா.4 மோகன் காவல் உதவி ஆய்வாளர் சாட்சியம் அளித்திருந்தாலும், அரசுத்தரப்பில் எதிரிகளை வழக்கு சம்பவத்தோடு தொடர்புபடுத்தி வழக்குடன் இணைக்கக்கூடிய நேரடி சாட்சியம் எதுவும் இந்த வழக்கில் அரசுத்தரப்பிற்கு ஆதரவாக இல்லாததாலும், இவ்வழக்கில் பார்வை மகஜர் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படாததாலும், எதிரிகள் தான் புகார்தாரரான அ.சா.1 சுரேஷ்குமாரை கெட்டவார்த்தையால் திட்டி அடித்து சொற்பகாயம் ஏற்படுத்தி, சேதம் ஏற்படுத்தினார்கள் என்று நிரூபிக்கப்படாததாலும், இவ்வழக்கில் சம்பவ சாட்சிகளாக விசாரிக்கப்பட்ட சாட்சியங்கள் அரசுத்தரப்பு வழக்கினை ஆதரிக்கும் வண்ணம் சாட்சியமளிக்காததாலும், எதிரிகள் மீதான குற்றச்செயல்கள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கப்பட்டதாக கருத இயலாது.

17. முடிவாக 1 ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(b),324–ன் கீழும், 2ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(b),323,427–ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து, எதிரிகளை கு.வி.மு.ச பிரிவு 248(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. எதிரிகளிடமிருந்து பெற்ற பிணையமானது மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு தானாகவே முறிந்துவிடும் என உத்தரவிடப்படுகிறது.

18. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் C.P.No.117/2022 ஆக குறியீடு செய்யப்பட்ட சா.பொ.1 ரீப்பர் கட்டை ஒன்றை மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னிட்டு அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தி சரிபார்க்கப்பட்டு 2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 27-ம் நாள் என்னால் திறந்த இந்த நீதிமன்ற அவையில் அவையறிய பகரப்பட்டது.

D SARAVANAN Digitally signed by D SARAVANAN

நீதித்துறை நடுவர்,
ஊத்தங்கரை

**அரசு தரப்பு சாட்சிகள்:-**

1) அ.சா.1 - சுரேஷ்குமார்
2) அ.சா.2 - ஆறுமுகம்
3) அ.சா.3 - செல்வி
4) அ.சா.4 - மோகன், காவல் உதவி ஆய்வாளர்

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:-**

1) அ.சா.ஆ.1 - புகார் வாக்குமூலத்திலுள்ள அ.சா.1 ன் கையொப்பம்
2) அ.சா.ஆ.2 - சமாதான மனு
3) அ.சா.ஆ.3 - புகார் வாக்குமூலம்
4) அ.சா.ஆ.4 - முதல் தகவல் அறிக்கை
5) அ.சா.ஆ.5 - மாதிரி வரைபடம்
6) அ.சா.ஆ.6 - பார்வைமகஜர்
7) அ.சா.ஆ.7 - அ.சா.1க்கு பெறப்பட்ட விபத்துபதிவேடு
8) அ.சா.ஆ.8 - அ.சா.2 க்கு பெறப்பட்ட விபத்துபதிவேடு
9) அ.சா.ஆ.9 - அ.சா.3 க்கு பெறப்பட்ட விபத்து பதிவேடு
10) அ.சா.ஆ.10 - அ.சா.1க்கு பெறப்பட்ட காயச்சான்றிதழ்
11) அ.சா.ஆ.11 - அ.சா.2க்கு பெறப்பட்ட காயச்சான்றிதழ்
12) அ.சா.ஆ.12 - அ.சா.3க்கு பெறப்பட்ட காயச்சான்றிதழ்

13) அ.சா.ஆ.13 – கைப்பற்றுதல் மகஜர்

14) அ.சா.ஆ.14 – படிவம் 91

**அரசு தரப்பு சான்றுபொருள் :-**

சா.பொ.1 ரீப்பர் கட்டை

**எதிரிகள் தரப்பு சாட்சிகள்:-** இல்லை

**எதிரிகள் தரப்பு சான்றாவணம்:- இல்லை**

D SARAVANAN Digitally signed by D SARAVANAN

நீதித்துறை நடுவர்,
ஊத்தங்கரை

**பின்குறிப்பு:-**

1. எதிரிகள் பிணையில் இருந்து முன்னிலையானார்கள்.
2. எந்த சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தப்படவில்லை.
3. வழக்கு முடிவு குறித்து காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

**நகல்:**

கிருஷ்ணகிரி தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

D SARAVANAN Digitally signed by D SARAVANAN